**O.S. No. 122/2021** **நாள்: 01.06.2026**

நீலகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டு ஜூன் மாதத்தில் 01-ம் நாள் **பிரதிவாதி பாலமுருகன் DW-2** என்பவரின் சாட்சியம் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி. ராமலட்சுமி, உதவியாளர் நிலை-3 என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **பாலமுருகன்** | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணன் | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | 64 |
| தாலூக்கா | : | | சாதி | : | |

---

<u>பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை :</u>

**1.** நான் இந்த வழக்கில் அழைப்பாணையின் பெயரில் ஆஜராகியுள்ளேன். இந்த வழக்கில் முதல்வர், Sacred Heart Matriculation Higher Sec.School, கைய்யூனி, கூடலூர் என்பவருக்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் மேற்படி Sacred Heart Matriculation Higher Sec.School, கைய்யூனி, கூடலூரில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கில் மேற்படி பள்ளியின் முதல்வர் சார்பாக சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அனுமதி கடிதத்தினை தாக்கல் செய்கிறேன். **(அந்த 30.05.2026 தேதியிட்ட அனுமதி கடிதம் அசல் மற்றும் அடையாள அட்டை ஒளி நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள ஆவணமான லினி என்பவரது பள்ளி மாற்று சான்றிதழின் ஒப்பம் அளிக்கப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **(அந்த 18.06.2003 தேதியிட்ட பள்ளி மாற்று சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட ஒளி நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**(வாதி அழைத்தும் ஆஜரில்லை என்பதாலும், வாதி தரப்பில் வழக்கறிஞர் யாரும் முன்னிலையாகவில்லை என்பதாலும், 2 முதல் 5 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகவில்லை என்பதாலும், வாதி மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது).**

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.06.01 17:51:47 +0530